# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC. 110/2020 <br> Sessions : <br> Deposition of Witness for : PW- 6 <br> Name : அசோகன் <br> Father's/Husband's Name : சிதம்பரம் <br> Nationality : Indian | Village: <br> Age :64 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 05.03.2025**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1,2,3,5 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 4ம் எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

குவிமுச. பிரிவு 311ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட Crmp.No.164/2025 மற்றும் 165/2025 24.02.2025ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் அசா1க்கு என்ன உறவுமுறை என்றால் தாய்மாமன் ஆவேன். போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக எத்தனை முறை என்னை விசாரித்தார்கள் என்றால் ஒரு முறை விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் அசா1ன் திருமணத்தின்போது ஒரு கார்

கொடுக்கப்பட்டதாகவும் அந்த காரை திருப்பி கொடுத்துவிட்டதாகவும் சொன்னேனா என்றால் இல்லை. போலிசார் விசாரணையில் 1ம் எதிரியின் அம்மாவான 2ம் எதிரி மல்லிகா அசா1ஐ 1ம் எதிரியுடன் வெளிநாட்டிற்கு அழைத்து செல்ல மறுத்துவிட்டார் என்றும் அதனால் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு நானும் சாட்சி லோகசித்தரனும் எதிரிகளின் வீட்டிற்கு சென்று சமாதானம் பேசி வந்தோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எத்தனை முறை அவ்வாறு பேச்சுவார்த்தை நடத்தினோம் என்றால் நானும் லோகசித்தரனும் ஒரு முறை சென்றோம். 2ம் முறை சென்றபோது எங்களை வெளியே போகுமாறு சொல்லிவிட்டார்கள். அவ்வாறு எந்த தேதியில் பேச்சு வார்த்தை நடத்தினோம் என்றால் தேதி ஞாபகமில்லை.

2. நான் முதல் விசாரணையில், 4ம் எதிரி ரம்யாவை ஒதுக்கி வைக்க வேண்டும் என்றால் ரூ.10 லட்சம் கொடுக்க வேண்டும் என்று 1, 2 எதிரிகள் அசா1 டம் அவரது அப்பாவிடம் இருந்து ரூ.10 லட்சம் வாங்கி தருமாறு கேட்டுள்ளார்கள் என்றும், அசா1 பணம் வாங்கி கொடுக்கவில்லை என்பதால் 21.12.2019ம் தேதி இரவு எதிரிகள் பிரகாஷ், மல்லிகா, ராஜேஷ் ஆகியோர் அசா1ஐ பேசி துன்புறுத்தியுள்ளார்கள் என்றும், மறுநாள் காலை 4ம் எதிரி ரம்யா மற்றும் அவரது தாயார் 5ம் எதிரி வசந்தா ஆகியோர் அங்கு வந்து அசா1ஐ அசிங்கமாக திட்டி அடித்து வீட்டை விட்டு வெளியே தள்ளிவிட்டார்கள் என்றும் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது.

3. உயர் நீதிமன்றத்தில் அசா1 மற்றும் 1ம் எதிரிக்கு கவுன்சிலிங் கொடுத்ததாக நான் முதல் விசாரணை சொல்லியுள்ள விவரம் இந்த வழக்கிற்கு முன்பு நடந்ததா அல்லது பின்பு நடந்ததா என்று சரியாக ஞாபகமில்லை. அவ்வாறு கவுன்சிலிங் நடந்த விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

அசா1க்கும் எதிரிக்கும் இடையே எத்தனை வழக்குகள் நடைபெற்று வருகிறது என்று தெரியுமா என்றால் மதுராந்தகத்தில் 3 வழக்குகள் உள்ளது. இந்த நீதிமன்றத்தில் வழக்குள்ளது. வேறு வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. இந்த வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை எனது அக்கா மகள் சொல்லி கொடுத்ததின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

( 4 , 5 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக கூறப்பட்டு பதிவு செய்யப்பட்டது).

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.03.06 10:05:15 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC. 110/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW- 5 | Village: | |
| Name | : அருள்செல்வம் | Age | :54 |
| Father's/Husband's Name | : சிதம்பரம் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 05.03.2025**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1,2,3,5 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 4ம் எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

<u>குவிமுச. பிரிவு 311ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட Crmp.No.164/2025 மற்றும் 165/2025 24.02.2025ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் அசா1க்கு என்ன உறவுமுறை என்றால் தாய்மாமன் ஆவேன். போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக எத்தனை முறை என்னை விசாரித்தார்கள் என்றால் ஒரு முறை விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் அசா1ன் மாமியாரான 2ம் எதிரி சீர் கொண்டு

வரவில்லை என அசா1ஐ தொடர்ந்து கொடுமை படுத்தி வந்துள்ளார் என சொன்னேனா என்றால் சொன்னேன். நான் பிரச்சனை சம்மந்தமாக எதிரிகளுடன் பேசினேனா என்றால் நான் எதுவும் பேசவில்லை. 1ம் எதிரி அசா1ஐ விட்டு 4ம் எதிரியை அழைத்துக் கொண்டு அபுதாபிக்கு சென்றுவிட்டதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு எப்போது சென்றார் என்றால் 2019 ம் வருடமாக இருக்கலாம். மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. 1ம் எதிரிக்கும் 4ம் எதிரிக்கும் குழந்தை பிறந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் விசாரித்து தெரிந்து கொண்டேன். யாரை விசாரித்து தெரிந்து கொண்டேன் என்றால் அசா1 மற்றும் சிற்றிடையாநல்லூர் கிராமத்தில் உள்ள சிலரை கேட்டு தெரிந்து கொண்டேன். போலிசார் விசாரணையில் 1, 2 எதிரிகள் மற்றும் அவரது குடும்பத்தார்கள் ரம்யாவை விளக்கி வைக்க வேண்டும் என்றால் ஒரு பெரிய தொகை கொடுக்க வேண்டும் என்று எனது அக்கா குடும்பத்தாரிடம் கேட்டதாக சொன்னேனா என்றால் இல்லை. அசா1க்கும் எதிரிக்கும் இடையே எத்தனை வழக்குகள் நடைபெற்று வருகிறது என்று தெரியுமா என்றால் மதுராந்தகத்தில் 2 வழக்குகள் உள்ளது. இந்த நீதிமன்றத்தில் வழக்குள்ளது. வேறு வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. அவ்வாறு வழக்கு இருப்பதாக எனது அக்கா கணவர் சொல்லி நான் தெரிந்து கொண்டேன். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை எனது அக்கா மகள் சொல்லி கொடுத்ததின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

( 4 , 5 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக கூறப்பட்டு பதிவு செய்யப்பட்டது).

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI
Date: 2025.03.06 10:05:30 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC. 110/2020 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : PW- 3 | Village: |
| Name | : சாந்திராணி | Age :58 |
| Father's/Husband's Name | : ரவிச்சந்திரன் | Taluk : |
| Nationality | : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 05.03.2025**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1,2,3,5 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 4ம் எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

குவிமுச. பிரிவு 311ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட Crmp.No.164/2025 மற்றும் 165/2025 24.02.2025ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் முதல்விசாரணையில்

சொல்லியுள்ள விவரங்களை நீதிமன்றத்தில்தான் முதன்முதலில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. 1வது எதிரிக்கும் அசா1க்கும் இடையே எத்தனை வழக்குகள் நடைபெற்று வருகிறது என்றால் மதுராந்தகத்தில் தற்போது 3 வழக்குகள் நடைபெற்று வருகிறது. இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. நான் இந்த வழக்கில் மட்டும்தான் சாட்சியாக உள்ளேன். 2019 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 முதல் 3 எதிரிகள் 4 ம் எதிரியை தள்ளி வைக்க வேண்டும் என்றால் ரூ.10,00,000/- பணம் கொடுக்க வேண்டும் என்றும், அதனால் எனது மகளை அவரது அப்பாவிடமிருந்து ரூ.1000000/- பணம் வாங்கி வருமாறு எனது மகளை அடித்துள்ளார்கள் என்றும் மறுநாள் காலை 4, 5 எதிரிகள் எனது மகளை அடித்து வீட்டிலிருந்து வெளியே தள்ளியுள்ளார்கள் என்றும் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது எனது மகள் சொல்லிதான் தெரியும். அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் இடையே கருத்து வேறுபாடு இருப்பதால் 1ம் எதிரியையும் அவரது குடும்பத்தாரையும் பழிவாங்க வேண்டும் என்பதற்காக எனது மகள் சொல்லி கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

( 4 , 5 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக கூறப்பட்டு பதிவு செய்யப்பட்டது).

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கைெயாப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.03.06 10:05:42 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC. 110/2020 | |
| Sessions : | |
| Deposition of Witness for : PW- 2 | Village: |
| Name : ரவிச்சந்திரன் | Age :69 |
| Father's/Husband's Name : ராஜேந்திரன் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 05.03.2025**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1,2,3,5 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 4ம் எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

குவிமுச. பிரிவு 311ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட Crmp.No.164/2025 மற்றும் 165/2025 24.02.2025 ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 2 முறை விசாரித்தார்கள். 2 முறை விசாரித்தபோது வாக்குமூலம் எழுதிக் கொண்டார்களா என்றால் எழுதிக் கொண்டார்கள். வாக்குமூலத்தில் கையொப்பம் வாங்கி

கொண்டார்களா என்றால் கையொப்பம் வாங்கி கொண்டார்கள். போலிசார் விசாரணையில் திருமணத்தின்போது எனது மகளுக்கு மாருதி ஸ்விப்ட் கார் கொடுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புகார் மனுவிலேயே சொல்லியுள்ளேன். போலிசார் விசாரணையில் மேற்படி காரை மட்டும் எங்கள் வீட்டிலேயே விட்டு சென்றுவிட்டதாக சொன்னேனா என்றால் மறுவிசாரணையில் சொல்லியுள்ளேன். புகார் மனு அளித்தபோது சொல்லவில்லை. இந்த வழக்கிற்கு பிறகு நீதிமன்றத்தில் சமாதானம் பேசப்பட்டதா என்றால் இல்லை. எனது மகள் மாண்பமை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் 1ம் எதிரி கும்பகோணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த விவாகரத்து வழக்கை மதுராந்தகம் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்திருந்தார்.

2. 1வது எதிரிக்கும் அசா1க்கும் இடையே எத்தனை வழக்குகள் நடைபெற்று வருகிறது என்றால் மதுராந்தகத்தில் தற்போது 3 வழக்குகள் நடைபெற்று வருகிறது. இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. நான் இந்த வழக்கில் மட்டும்தான் சாட்சியாக உள்ளேன். எனது மகளின் குழந்தைக்கு காதுகுத்து விழா நடைபெறும் வரை எனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் இடையே பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் 1ம் எதிரி போன் செய்தாலும் எடுப்பதில்லை என்பதால் எனது மகளை குழந்தையுடன் அபுதாபிக்கு அனுப்பி வைத்தேன் என்றால் அவர் அங்கு சென்று 1ம் எதிரியை சந்தித்தபோது ஏன் என்னிடம் சொல்லாமல் இங்கு வந்தாய் என்றும் இங்கேயே இரு என்று சொல்லிவிட்டு அவர் இந்தியாவிற்கு வந்துவிட்டார் என்றும் நான் ரிட்டன் டிக்கெட் கொடுத்திருந்ததால் அன்றைய தினம் இரவே அபுதாபியிலிருந்து கிளம்பி வந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேனா என்றால் போலிசார் என்னை என்ன

கேட்டார்களோ அதை மட்டும் சொல்லியுள்ளேன். மேற்படி விவரத்தை நான் தற்போதுதான் முதன்முதலில் நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரிதான்.

3. எனது முதல் விசாரணையில் 1 முதல் 3 எதிரிகள் ரூ.10,00,000/- பணம் வாங்கி வருமாறு எனது மகளிடம் சொன்னார்கள் என்றும், 20.12.2019 ம் தேதி இரவு 8 மணியளவில் 1 முதல் 3 எதிரிகள் எனது மகளை அடித்துள்ளார்கள் என்றும் மறுநாள் காலை 4, 5 எதிரிகள் எனது மகளை அடித்து அங்கிருந்து செல்லுமாறு மிரட்டியுள்ளார்கள் என்றும் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது எனது மகள் சொல்லி தெரியும். அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது மகளுக்கும் 1 ம் எதிரிக்கும் இடையே கருத்து வேறுபாடு இருப்பதால் 1 ம் எதிரியையும் அவரது குடும்பத்தாரையும் பழிவாங்க வேண்டும் என்பதற்காக எனது மகள் சொல்லி கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

( 4 , 5 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக கூறப்பட்டு பதிவு செய்யப்பட்டது).

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.03.06 10:05:55 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC. 110/2020 <br> Sessions : <br> Deposition of Witness for : PW- 4 <br> Name : பாலுச்சாமி <br> Father's/Husband's Name : தங்கராசு <br><br> Nationality : Indian | Village: <br> Age :62 <br> Taluk : <br><br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 05.03.2025**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1,2,3,5 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 4ம் எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

குவிமுச. பிரிவு 311ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட Crmp.No.164/2025 மற்றும் 165/2025 24.02.2025 ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் அசா1 க்கு என்ன உறவுமுறை என்றால் பெரியப்பா ஆவேன். நான் பேச்சுவார்த்தையில் கலநது கொண்டேனா என்றால் கலந்து கொண்டேன். எந்த தேதியில் பேச்சுவார்த்தை நடந்தது என்றால் தேதி வருடம் ஞாபகமில்லை. நானும் லோகசித்தரனும்

எதிரி வீட்டிற்கு சமாதானம் பேச எந்த தேதியில் சென்றோம் என்றால் தற்போது ஞாபகமில்லை. 1ம் எதிரிக்கு வேறு ஒரு பெண்ணுடன் திருமணம் ஆகிவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு நடைபெற்றதாக சொல்லப்படும் திருமணத்திற்கு நான் சென்றேனா என்றால் இல்லை. தெரியும். மேற்படி விவரம் நான் கேள்விபட்டது தான் என்றால் சரிதான். அசா1க்கும் எதிரிக்கும் இடையே எத்தனை வழக்குகள் நடைபெற்று வருகிறது என்று தெரியுமா என்றால் இந்த வழக்கு மட்டும் தெரியும். மற்ற வழக்குகள் பற்றி எனக்கு தெரியாது. வேறு வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

( 4 , 5 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக கூறப்பட்டு பதிவு செய்யப்பட்டது).

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2025.03.06 10:06:03 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**